# ஆய்த எழுத்து

தமிழியல் ஆய்வு இதழ்

காலாண்டிதழ்

ஜனவரி – 2016

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN: 2278-7550



முனைவர் சி. சத்யா

# ஆய்த எழுத்து

## தமிழியல் ஆய்வு இதழ்

INTERNATIONAL JOURNAL FOR TAMIL STUDIES ISSN : 2278-7550

மலர் : 4 ஜனவரி - 2016 இதழ் : 1

**கௌரவ ஆசிரியர்**
**முனைவர் சொ. சுப்பையா**
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.


**இணை ஆசிரியர்**
**முனைவர் க. இரமேஷ்**
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,வேலூர்.

**சிறப்பாசிரியர்**
**முனைவர் அ. அறிவுநம்பி**
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி

**துணை ஆசிரியர்**
**முனைவர் போ. சத்தியமூர்த்தி**
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்,மதுரை.

**ஆசிரியர்**
**முனைவர் சி. தியாகராசன்**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

**பதிப்பாசிரியர்**
**நல். நடராசன்**
தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.






**0424**
**4562211,2263197**
**94422 51549**
**96291 82383**

**pallavipublications@gmail.com**
**ayidhaezhuthu@gmail.com**

**பல்லவி பதிப்பகம்**
194,கண்ணா காம்ளக்ஸ் , இரண்டாவது தளம்,
மேட்டூர் சாலை, ஈரோடு-638011.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1.சோழ நாட்டின் மருமகள் காவேரி | - | முனைவர்.க.ஆனந்தி | 5 |
| 2.இயேசு காவியத்தில் உவமைகள் | - | முனைவர்.தா.க.அனுராதா | 8 |
| 3.குழந்தைப் பாடல்களில் கல்வி | - | சு.அய்யனார் | 11 |
| 4.குறுந்தொகை வழிபாடு | - | அ.ஜெனார்த்தலிபேகம் | 14 |
| 5.அறமும் புறமும் காட்டும் கல்வி | - | சு.கௌரி | 17 |
| 6.தமிழ்மொழி வளர்ச்சியில் தெளிதமிழ் திங்களிதழ் | - | க.கண்ணன் | 22 |
| 7.வழிபாட்டில் பண்பாடு | - | பேரா.முனைவர்.மு.குருவம்மாள் | 25 |
| 8.கடல்சார் மக்கள் வாழ்வு ஆறுகாட்டுத்துறை புதினத்தை முன்வைத்து | - | முனைவர்.வீ.மீனாட்சி | 26 |
| 9.பக்தியில் ஆண்டாளும் மீராவும் | - | முனைவர்.க.மீரா | 29 |
| 10.தாலாட்டுப் பாடல்கள்-சிறப்பு | - | முனைவர்.க.முத்தழகி | 32 |
| 11.வணிக நாவல்களில் பாத்திரபடைப்பு | - | G.பிரதிபா | 35 |
| 12.பிரபஞ்ச வைராக்கியம் | - | முனைவர்.ப.பிரியா | 38 |
| 13.இரந்தார்க்கு இன்முகம் | - | முனைவர்.மு.புஷ்பாரெஜினா | 40 |
| 14.ராஜம் கிருஷ்ணன் புதினங்களில் பெண்ணியம் | - | து.புஷ்பவள்ளி | 43 |
| 15.சங்க அக இலக்கியங்களில் முல்லை வருணனை | - | ச.ராஜேஸ் | 46 |
| 16.பெருஞ்சொல்லகராதியின் அமைப்பும் சிறப்பும் | - | முனைவர்.சு.சத்தியா | 50 |
| 17.பண்டைய இலக்கியத்தில் விழாக்கள் | - | முனைவர்.பி.சேதுராமன் | 56 |
| 18.இரட்டைக் காப்பியங்களில் பெண்களின் சிறப்புக்களும் பாவேந்தரின் ஒத்தக்கருத்து | - | மா.விஜயலெட்சுமி | 60 |
| 19.இல்வாழ்வின் மேன்மை; திருக்குறளும் இன்னிலையும் | - | முனைவர்.மு.வையபுரி | 63 |
| 20.தொடக்க நிலையில் தமிழ்பாடம் கற்பித்தல் திறன் | - | முனைவர் மெ.வனிதா | 66 |
| 23.தமிழில் விளிம்புநிலைத் தன்வரலாறுகள் | - | எம்.எம்.ஜெயசீலன் | 78 |
| 21.சங்க இலக்கியத்தாவரங்களின் மருத்துவப் பயன்கள் (பிரண்டை, பீரம்) | - | பா.ஆரோக்கியதாஸ் | 71 |
| 22.குறுந்தொகையில் மலர்கள் | - | தா.பத்மா | 74 |
| 24.உலக அரங்கில் எதிர்ப்புக் கவிதை வரலாறு | - | திரு.செல்லத்துரைசுதர்சன், முனைவர்.போ.சத்தியமூர்த்தி | 84 |

# பெருஞ்சொல்லகராதியின் அமைப்பும் சிறப்பும்

**முனைவர் சு.சத்தியா**
உதவிப் பேராசிரியர்
பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி
தஞ்சாவூர்.

**முன்னுரை**

"**அ**றிவைப் புகட்டும் சொல்

ஆய்ந்தறிந்த அவையோர் கண்ட சொல்

இயல்பான நடை காட்டும் சொல்

ஈத்துவக்க ஈட்டில்லா பொருள் தரும் சொல்

உள்ளதை உள்ளத்தில் பதியவைக்கும் சொல்

ஊர்தோறும் தமிழுக்காக நடைபோடும் சொல்

எல்லை தாண்டியும் பரவிட வழிவகுக்கும் சொல்

ஏற்றமிகு ஏடுகள் பலதந்த சொல்

ஐயம் நீக்கி அடிநிலையாய் நிற்கும் சொல்

ஒரே சொல்லில் பலபொருள் அள்ளித்தரும் சொல்

ஓராயிரம் ஆண்டானாலும் வளர்ந்து கொண்டேயிருக்கும் சொல்

ஔவியம் நீக்கி ஆற்றலை வளர்க்கும் பொருஞ்சொல்லகராதிச்சொல்

(லாக்கம்)"

ஒரு மொழியின் வளர்ச்சி நிலையை, அம்மொழியில் தோன்றியுள்ள பல்துறைச் சார்ந்த நூல்களின் வழி அறிந்து கொள்ளமுடிகின்றது. சான்றாக, இன்று நம் தமிழ் மொழியானது சொம்மொழி என்னும் சிறப்பினைப் பெற்று, உலகெங்கும் தமிழனின் புகழை சரித்திரம் படைக்க வைத்துள்ளது. இன்று நம்மொழியில் இலக்கணங்கள், இலக்கயங்கள், நிகண்டுகள், அகராதிகள் மற்றும் பல்துறைச் சார்ந்த நூல்கள் தோன்றியும், தோன்றிய வண்ணமாகவும் இருக்கும் வரும் நிலையில் "சொல் புதிது சுவை புதிது" எனும் பாரதியின் கூற்றுக்கேற்ப வரையறையற்றப் புதிய சொற்களைத் தந்ததோடு அல்லாமல், இன்றளவும் சொல் ஆராய்ச்சி மூலம் பல்வேறு ஏடுகளைத் தந்து கொண்டிருக்கும் பெருஞ்சொல்லகராதித் துறையில் இது வரை வெளிவந்துள்ள பெருஞ்சொல்லகராதி 1 – 6 தொகுதிகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**அகராதி** : அகராதி என்பது பல்வேறுபட்ட நோக்கு நிலை நூல்களுள் ஒன்றாகும். இன்று சொற்களுக்குப் பொருள் காணும் பல்வேறு அகராதிகள் உருவாகியும் உருவாகிக் கொண்டிருக்கும் நிலையிலும், தமிழ்ச் சொற்களுக்குத் தமிழில் பொருள் தரும் பல்வேறு ஒருமொழி அகராதிகள் தோன்றியுள்ளன. அவற்றுள் பெருஞ்சொல்லகராதி தனித்துவம் பெறுகிறது என்றால் மிகையாகாது.

**பெருஞ்சொல்லகராதி**: அகராதி என்பது சொல்லுக்கு பொருளைத் தருவது. ஆனால், பெருஞ்சொல்லகராதி என்பது பல்துறைச் சார்ந்த சொற்களைத் தொகுத்து தருவதனால் பெருஞ்சொல்லகராதி எனப் பெயர் பெற்றது.

**தோற்றம்**

தஞ்சையை நெற்களஞ்சியம் என்பார்

அக்களஞ்சியத்திற்கெல்லாம் சொற்களஞ்சியமே தமிழ்ப்பல்கலைக் கழகம்!

என்பதை இங்குள்ள தமிழ் வளர்க்கும் பல துறைகள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. தமிழ்மொழி இன்று துறைதோறும் வளர்ந்துள்ள நிலையினை இங்குள்ள பல்வேறு துறைகளின் வளர்ச்சிப் பணிகள் மூலமாக நன்குணர முடிகின்றது.

தமிழிலுள்ள பல்துறைச் சொற்களைப் பதிவு செய்யும் ஆவணமாக திகழ்வது தான பெருஞ்சொல்லகராதி! இவ்வகராதியை தொகுத்து வெளியிடும் பெருஞ்சொல்லகராதி என்னும் பெருந்திட்டம் 1983-ஆம் ஆண்டு பேராசிரியர் முனைவர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்களால் தொடங்கப்பட்டது. மிக நீண்ட கால திட்டமாக அமைந்த இவ்வகராதித் தொகுப்பு பணியானது இதுவரை 6 தொகுதிகளை வெளியிட்ட சிறப்புக்குரியதாகும்.

**நோக்கம்**

இவ்வகராதி இந்திய விடுதலைக்குப்பின் வெளிவரும் நிலையில் இதில் கி.மு முதல் தற்காலம் (1992) வரை வெளிவந்த நூல்களிலிருந்து சொற்களைப் பதிவுகளாகத் தருவதோடு தமிழ் மொழியின் வளர்ச்சியை வெளிப்படுத்துவதும் பதிவுசெய்வதும் இதன் முதல் நோக்கமாகவும் பள்ளி,கல்லூரி மாணவர்களும் புரிந்துகொள்ளும் வகையில் எளிய நடையில் அமைந்துள்ளது.

**தரவுகள்**

தமிழ் ஒருமொழி அகராதியான இவ்வகராதி பேரகராதியாக மட்டுமல்லாமல் வரலாற்று அடிப்படையிலும் அமைந்துள்ளது. மேலும், இலக்கண, இலக்கிய மேற்கோள்களை தொல்காப்பியம் தொடங்கி, இக்காலம் வரையிலான பல்வேறு துறை சார்ந்த நூல்களின் சொற்களையும் அகராதிகள், நிகண்டுகள், கலைச்சொல்லகராதிகள், கலைச்சொல் பட்டியல்கள்,சொல்லடைவுகள் மற்றும் வழக்குச் சொற்கள் போன்றவற்றிலுள்ள சொற்களையும் பதிவு செய்துள்ளன என்ற செய்திகள் ஒவ்வொரு தொகுதியின் முன்னுரை பகுதியில் இடம்பெற்றுள்ளன.

**பெருஞ்சொல்லகராதி – பதிவமைப்பு**

இவ்வகராதியானது அகராதி என்னும் பதிவுச் சொல்லுக்கு பொருள் தரும் நிலையினையும் அதன் அமைப்பு முறையையும் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றது.

அகராதி பெ. 1. அகரம் முதலிய எழுத்துகள். ஐந்து கலையில் அகராதி தன்னிலே **(திருமந்.978).**


2. தொகுதி, கூட்டம். சொல்லகராதி விரிய **(முன்.2292).**

3. ஒரு மொழி பெற்றுள்ள சொற்களை அம்மொழிக்கு இயல்பான எழுத்துமுறை வரிசையில் அகரம் ஆதியாகஅமைத்துப் பொருள் கூறும் நூல் ஆதரவால் அகராதி .... ஓதினன்**(அக.நி.பாயிரம்).** தமிழ்ச் சொல்லகராதி **(மதுரைத் தமிழ்ச் சங்கம வெளியிட்ட அகராதியின் பெயர்).**

4. குறிப்பிட்ட துறையின் சொற்களை அகரவரிசைப்படி அமைத்துப் பொருள் விளக்கும் சொற்பட்டியல் . மருத்துவக் கலைச்சொல் அகராதி **(புதிய வ.).**

5. வீண் தர்க்கம் செய்யும் இயல்பு. அவன் அகராதி பிடித்தவன் **(நாட்.வ.).**

மேற் காண்பவை இவ்வகராதிகளில் தலைச்சொல் பதிவும் பொருள் விளக்கமும் மேற்கோள்களுடன் அமைந்துள்ளதைக் காட்டுகின்றன. மேலும், இவ்வகராதிகள் எந்த அமைப்பில் அமைந்துள்ளன என்பதை பின்வரும் மாதிரிப்பதிவுகள் சான்றாகக் கூறுகின்றன. தலைச்சொல் பதிவு முறையில் வேறுபாடுகள்



இவ்வகராதியின் ஆறு தொகுதிகளிலும் தலைச்சொல் பதிவில், இலக்கணக் குறிப்பான்களான பெயர், வினை, பெயரடை, வினையடை, இடைச்சொல் போன்றவற்றில் மாறுபாடு உள்ளன. சான்றாக, பின்வரும் அட்டவணையைக் காண்போம்.

ஜனவரி 2016 ஆய்வு மலர் – தமிழியல் ஆய்வு இதழ் ISSN : 2278 - 7550 53

சான்று

பெருஞ்சொல்லகராதியின் 1–6 தொகுதிகளின் தலைச்சொல் பதிவுகள்

| வ.எ. | தொகுதி – 1 | தொகுதி – 2 | தொகுதி – 3 | தொகுதி – 4 | தொகுதி – 5 | தொகுதி – 6 |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1. அஃகு$^{1}$ – தல் 5 வி.<br>அஃகு$^{2}$ வை. | ஆக்கங்கெடு – தல் 5 செ.கு.வி. | ஈ.ங்கு$^{1}$ (ஈ.ங்காது) வை.<br>ஈ.ங்கு$^{2}$ வை.<br>ஈ.ங்கு$^{3}$ கு.அ. | உக்கு$^{1}$ – தல் 5 வி.<br>உக்கு$^{2}$ – தல் 5 வி.<br>உக்கு$^{3}$ வை. | கக்கு$^{1}$ – தல் 5 வி.<br>கக்கு$^{2}$ – தல் 5 வி.<br>கக்கு$^{3}$ வை. | காட்டில்$^{1}$ கு.அ.<br>காட்டில்$^{2}$ கு.தொ.<br>காட்டில்$^{3}$ கு.கு.தொ. |
| 2 | 2. அகை – தல் 4 வி.<br>அகை – த்தல் 11 வி.<br>அகை வை. | ஆக்கியாபட்$^{1}$ – த்தல் 11 செ.கு.வி.<br>ஆக்கியாபட்$^{2}$ – த்தல் 11 செ.குன்றா.வி. | ஈ.சா$^{1}$ – தல் 5 வி.<br>ஈ.சா$^{2}$ வை. | உசா$^{1}$ – த்தல் 11 வி.<br>உசா$^{2}$ – தல் 4 வி.<br>உசா$^{3}$ – தல் 4 வி.<br>உசா$^{4}$ – தல் 4 வி.<br>உசா$^{5}$ – தல் 4 வி.<br>உசா$^{6}$ வை. | கடற்கோள்$^{1}$ – த்தல் 11 வி.<br>கடற்கோள்$^{2}$ வை. | கோண்$^{1}$ வை.<br>கோண்$^{2}$ (ணு) – தல் 13 வி.<br>கோண்$^{3}$ (ணு) – தல் 13 வி.<br>கோண்$^{4}$ கு.தொ. |
| 3 | 3. அணை$^{1}$ கு.வி.அ.<br>அணை$^{2}$ வை.<br>அணை$^{3}$ வை.அ. | ஆக்கு$^{1}$ வை.<br>ஆக்கு$^{2}$ வை.<br>ஆக்கு – தல் 5 செ.குன்றா.வி. | ஈ.றி$^{1}$ – த்தல் 11 வி.<br>ஈ.றி$^{2}$ வை. | ஐய$^{1}$ வை.அ.<br>ஐய$^{2}$ கு.அ.<br>ஐய$^{3}$ கு.தொ. | கட்டாணி$^{1}$ வை.<br>கட்டாணி$^{2}$ வை.<br>கட்டாணி$^{3}$ வை.<br>கட்டாணி$^{4}$ வை.அ. | குழு$^{1}$ வை.<br>குழு$^{2}$ வை.<br>குழு$^{3}$ வை.<br>குழு$^{4}$ – த்தல் 11 வி. |
| 4 | 4. அணைத்து$^{1}$ கு.வி.<br>அணைத்து$^{2}$ கு.அ.<br>அணைத்து$^{3}$ வை.அ.<br>அணைத்து$^{4}$ சு.வை.<br>அணைத்து$^{5}$ வை. | ஆங்கு$^{1}$ – தல் 5 செ.கு.வி.<br>ஆங்கு$^{2}$ – தல் 5 செ.கு.வி.<br>ஆங்கு$^{3}$ கு.அ.<br>ஆங்கு$^{6}$ கு.தொ. | ஈ.ண்$^{1}$ (ணு) – தல் 8 வி.<br>ஈ.ண்$^{2}$ (ணு) – தல் 8 வி.<br>ஈ.ண்$^{3}$ (ணு) – தல் 8 வி.<br>ஈ.ண்$^{4}$ வை.<br>ஈ.ண்$^{5}$ வை.<br>ஈ.ண்$^{6}$ வை.<br>ஈ.ண்$^{7}$ வை.அ.<br>ஈ.ண்$^{8}$ வை.அ.<br>ஈ.ண்$^{9}$ கு.அ. | ஒதி$^{1}$ – தல் 4 வி.<br>ஒதி$^{2}$ – த்தல் 4 வி. | கிளை$^{1}$ – த்தல் 11 வி.<br>கிளை$^{2}$ – தல் 11 வி.<br>கிளை$^{3}$ வை. | குழைசெடு$^{1}$ – த்தல் 11 வி.<br>குழைசெடு$^{2}$ – தல் 6 வி. |

மேற்கண்ட அட்டவணைப்படி தலைச்சொல் பதிவமைப்பில் மாறுதல் இருந்தாலும் ஒவ்வொரு தொகுதியிலும், ஒவ்வொரு சொல்லுக்கும் இலக்கணக்குறிப்பு கொடுத்து, பொருள் கொடுக்கப்பட்டு, அப்பொருளை விளக்க, இலக்கியங்களிலிருந்தும் பேச்சு வழக்கிலிருந்தும் கால வரிசைப்படி மேற்கோள்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 'அடி' என்பது வினையாக மட்டும் பொருள் வேறுபாட்டிற்கிணங்க 14 தலைச்சொற்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன. சான்றாக,

அடி[1] –த்தல் 11வி.

1.(முழவு முதலியன) முழக்குதல், தட்டுதல். விசி கூடு முழவின் பாடு இன்தெண்கண் கனி செத்து அடிப்பவன்**(புறநா.128, 2-3).**பறை அடிக்கின்ற அந்தப் பயம் அற **(கம்ப.4,7,150).**

2.மணி ஒலித்தல், கணகண என்று எக்கணமும் நாக்கின் அடிக்கும் மணிவிசை **(நாஞ்.மரு.மான்.2,33).**

3.(பந்து முதலியவற்றை அடித்து) ஆடுதல். தென்னன் வாழ்க வாழ்கவென்று சென்று பந்து அடித்துமே **(சிலப்.29,20,3)** ஆயநங்கை நனியடித்து அவள் அகல **(பெருங்.4,12,64).** பந்தடித்திடுவார்....கறங்காடுவார்**(பாரதம்.3,7,60).** நான் இவ்வமனக் கூத்தெல்லாம் அடித்தேன் **(தொண்டரடி.திருமலை 34 வியாக்.)** சிறுவர் கோலியடித்துக் கொண்டிருந்தார்கள். **(நாட்.வ.).**

மேற்காணும் பதிவமைப்பைப் போல் பல்வேறு பொருள்களைக் குறித்து வினை, பெயர், இடைச்சொல் என்ற பதிவமைப்பில் அடி என்ற ஒரு சொல் 25 தலைச்சொற் பதிவுகளை கொண்டுள்ளன. இவ்வாறு ஒரு சொல்லுக்குப் பலபொருள் தரும் நிலையில் பெருஞ்சொல்லகராதிகள் அமைந்துள்ளன.

மேலும் இவ்வகராதிகளின் பொருளடக்கப் பகுதியில் இவ்வகராதிக் குறித்த விளக்கங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. முன்னுரை

பதிவுநிலை
- தலைச்சொல்
- பொருள் விளக்கம்
- மேற்கோள் (கால அடிப்படையில்)

2. இணைப்பு
- எடுத்துக்காட்டுப்படி
- அகராதியை பயன்படுத்துவோர்க்குரிய சில குறிப்புகள்
- வேறுபட்டு வழங்கும் வினை வாய்ப்பாடுகள்
- செய் என்னும் வினை வடிவங்கள்
- குறியீடுகள்
- பிற சுருக்கங்கள்
- நூல் மேற்கோளாட்சி முறை
- இவ்வகராதியில் கொடுக்கப்பட்ட நூல்கள், அவற்றின் சுருக்கங்கள் பதிப்பு முதலிய விபரங்கள் அட்டவணைப்படுத்தப் பட்டுள்ளன.

**பெருஞ்சொல்லகராதியின் தனிச்சிறப்பு**

✓ தலைச்சொல் பதிவுகள்

✓ மேற்கோள்கள் (காலஅடிப்படையில்)

✓ குறுக்கு நோக்கீடு

போன்ற பதிவுகள் வேறு எந்த ஒரு மொழி அகராதியிலும் இல்லாது இப்பெருஞ்சொல்லகராதிகளில் இடம் பெற்றுள்ளதைக் கொண்டு இதன் தனிச்சிறப்பை நாம் உய்த்துணர முடிகின்றது. இதுவரை வெளிவந்துள்ள பெருஞ்சொல்லகராதித் தொகுதிகள்

இதுவரை வெளிவந்துள்ள பெருஞ்சொல்லகராதித் தொகுதிகள்

| தொகுதிகள் | பதிவுகள் தலைச்சொற்கள் | ஆண்டுகள் | பக்கங்கள் | தலைச்சொற்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தொகுதி 1 | அ - அனைவோர் | 1988 | 564 | 13,155 |
| தொகுதி 2 | ஆ - இணைவு | 1989 | 648 | 16,978 |
| தொகுதி 3 | ஈ - உனிமம | 1992 | 497 | 9,046 |
| தொகுதி 4 | ஊ - ∴ | 2002 | 476 | 7,953 |
| தொகுதி 5 | க் - கனோபலம் | 2010 | 438 | 10,196 |
| தொகுதி 6 | கா - கூனைவண்டு | 2010 | 375 | 10,615 |
| | | | சொற்களின் எண்ணிக்கை – | 67,943 |

## தொகுப்புரை

மேற்காணும் தரவுகளை அடிப்படையாக நிகண்டு பெருஞ்சொல்லகராதியானது பல தொகுதிகளாகத் தொகுத்தும் தொகுக்கப்பட்டும் அமைக்கப்பெற்றுள்ளன.

இவ்வகையமைப்பின் சொற்பொருள் விளக்கநிலை தெளிவுபட அமைந்துள்ளதே இவ்வகராதியில் சிறப்பாகக் காணப்பெறுகின்றன.

## துணைநூற் பட்டியல்


1.பெருஞ்சொல்லகராதி தொகுதி – 1,2,3,4,5,6

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

ISSN : 2278-7550

பல்லவி பதிப்பகம்

2278-7550